

புரட்சிப்
# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | அக்டோபர் 4, 2018 | புரட்சி 17 | முழக்கம் 38 | விலை: ரூ.3.00


## 1971இல் சேலம் மாநாட்டில் பெரியார் நிறைவேற்றிய தீர்மானத்துக்கு

# உச்சநீதிமன்றம் ஒப்புதல் வழங்கியது

1971ஆம் ஆண்டு ஜன.23, 24ஆம் தேதிகளில் சேலத்தில் பெரியார் நடத்திய மூடநம்பிக்கை ஒழிப்பு மாநாட்டில் பெரியார் முன்னிலையில் திராவிடர் கழகம் ஒரு புரட்சிகர தீர்மானத்தை நிறைவேற்றியது. ‘ஒருவரின் மனைவி மற்றொருவருடன் உடல் உறவு கொண்டால் - அதை கிரிமினல் குற்றமாகக் கருதக் கூடாது’ என்ற அத்தீர்மானம் அப்போது பொது வெளியில் கடுமையாக விமர்சிக்கப்பட்டது.

இத்தீர்மானத்தை ‘இந்து’, ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’, ‘தினமணி’ போன்ற பார்ப்பன நாளேடுகள் திரித்து, ‘ஒருவன் மனைவியை மற்றவன் அபகரித்துக் கொண்டு போவது குற்றமல்ல’ என்று செய்தி வெளியிட்டன. இதை எதிர்த்து அந்த ஏடுகள் மீது திராவிடர் கழகம் நீதிமன்றத்தில் (சென்னை பெருநகர 5ஆவது நீதிமன்றம்) வழக்கு தொடர்ந்தது. வழக்கு தொடர்ந்த பிறகும், மீண்டும் ஒரு முறை ‘இந்து’ நாளேடு, அதே போன்று ‘திரிபு’ செய்தியை வெளியிட்டது. இதை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் திராவிடர் கழகம் அந்த ஏட்டின் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்தது. நீதிமன்றத்தில் ‘இந்து’ ஏடு நிபந்தனையற்ற மன்னிப்புக் கேட்டது (16.3.1971). இந்த வரலாற்றுக் குறிப்பை இப்போது நினைவூட்டு வதற்கும் காரணம் உண்டு.

கடந்த செப்டம்பர் 27ஆம் தேதி உச்சநீதிமன்றம் 1971இல் பெரியார் நிறைவேற்றிய தீர்மானத்தை தனது தீர்ப்பின் வழியாக நியாயப்படுத்தி யிருக்கிறது. இந்திய தண்டனைச் சட்டத்தின் 497ஆவது பிரிவு, கணவர் சம்மதம் பெறாமல், மனைவி வேறு ஒருவருடன் உடல் உறவு கொள்வது தண்டனைக்குரிய குற்றம் என்று கூறுகிறது. இந்தப் பிரிவு பெண்களுக்கு எதிரானது. அது நீக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையிலேயே சேலம் மாநாட்டில் திராவிடர் கழகம் தீர்மானம் நிறைவேற்றியது. இப்போது உச்சநீதிமன்றம் செல்லாது என்று அறிவித்திருப்பது இந்த 497ஆவது பிரிவைத் தான்.

ஒரு மனைவி உடல்உறவு கொள்ளும் உரிமை கணவனிடம் மட்டுமே உண்டு. மீறுவது பாலுறவு வன்முறை (விபச்சாரம்) என்ற சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பதற்கு பெரியார் கூறிய காரணத்தை இப்போது உச்சநீதிமன்றமும் ஒப்புக் கொண்டிருக்கிறது. கணவன் சம்மதித்தால் அது குற்றமாகாது என்றால் ஒரு பெண்ணின் உடல் கணவனின் சொத்து உடைமையாக்கப்படுகிறது. பிறருடன் கொள்ளும் உறவு ‘திருட்டுத் தனமானது’ என்கிறது. மனைவிக்கு மட்டுமே பேசும் இந்தக் ‘கற்பு’, பெண்ணடிமையை வலியுறுத்துவதோடு, பெண் என்பவள் கணவன் இன்பத்துக்கான நுகர் பொருளாக்கப்படுகிறார். பெண் விடுதலைக் கண்ணோட்டத்தில் பெரியார் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றினார். இப்போது நீதிபதி டி.ஒய். சந்திரசூட், தனது தீர்ப்பிலும் இதே கருத்தையே பதிவு செய்திருக்கிறார். மனைவி மீது விபச்சாரக் குற்றச்சாட்டை சுமத்தும் இந்தச் சட்டம், ஆண்களின் ஆதிக்கத்துக்கு மட்டுமே பயன்பட்டு வந்திருக்கிறது என்றும், பெண் தனக்கான பாலுறவு சுதந்திரத்தை தடுத்து வந்துள்ளது என்றும் நீதிபதி தீர்ப்பில் குறிப்பிடுகிறார்.

(The history of section 497 reveals that the law on adultery was for the benefit of the husband, for him to secure ownership over the sexuality of his wife. It was aimed at preventing the women from exercising her sexual agency)

‘கற்பு’ மனைவிக்கு மட்டுமே உரியது என்ற சட்டம், காட்டு மிராண்டித்தனமானது என்பதற்கு வரலாற்றிலிருந்து பல உதாரணங்களை எடுத்துக் காட்டியிருக்கிறார் நீதிபதி.

“பாபிலோனியா நாகரிகத்தில் இந்தக் ‘குற்றத்தை’ இழைத்த ஆண்-பெண் இருவரையும் தண்ணீரில் மூழ்கடித்து சாகடிக்க வேண்டும் என்ற சட்டம் இருந்தது. கிரேக்க-ரோமானிய நாகரிகங்களும் இதேபோல் பெண்களைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தின. ஆனால் ஆண்களுக்கு இந்தக் ‘குற்றங்களுக்கு’ தண்டனைக் கிடையாது. 1650ஆம் ஆண்டு இங்கிலாந்து சட்டம் , கணவன்-மனைவிக்கு வெளியிலான ‘உடலுறவு’க்கு பெண்களுக்கு மரண தண்டனையை சட்டமாக வைத்திருந்தது. அந்தக் கண்ணோட்டத்தில் தான் பிரிட்டிஷ் ஆட்சி, இந்தியாவிலும் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தது 21ஆம் நூற்றாண்டிலும் பெண்களுக்கான உரிமைகளைப் பறித்து வைத்திருக்க முடியாது. ஆனால், சமூகத்தின் மனநிலை பெண்களை ஒடுக்கி வைப்பதாகவே இருக்கிறது என்று நீதிபதி கூறியிருப்பதோடு, “சட்டமும் சமூகத்துக்கும் இடையிலான உறவு உள்ளார்ந்தது; பிரிக்க முடியாது பிணைந்திருக்கிறது (பெண்களை அடக்கி வைக்க வேண்டும்) என்ற சமூக மதிப்பீடுகள் சட்டங்களிலும் வெளிப்படுகின்றன. இந்த நிலையில் சட்டங்களும் சட்டங்களுக்கான விளக்கங்களும் ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும் - விடுதலைக்கு உவப்பாகவும் பரிணாமம் பெற வேண்டும்” என்று மிக ஆழமாக நீதிபதி சுட்டிக்காட்டியிருக்கிறார்.

பெரியார் இதே கருத்தை தனது மொழியில் இப்படி கூறுகிறார்:

> “விபச்சாரம் எனும் வார்த்தையின் அனுபவ தத்துவத்தைக் கூர்ந்து கவனித்துப் பார்த்தால் ‘விபச்சாரம்’ என்பது பெண்கள் அடிமை என்பதைக் காட்டும் ஒரு குறிப்பு வார்த்தை என்றுதான் சொல்ல வேண்டுமேயொழிய வேறல்ல. ஏனெனில் விபச்சாரத் தோஷம் என்பதும், விபச்சாரம் செய்வதால் ஏற்படும் ஒழுக்கக் குறைவு என்பதும் இப்பொழுது வழக்கத்தில் பெண்களுக்குத்தான் உண்டேயொழிய, ஆண்களுக்கு அந்த மாதிரி கிடையவே கிடையாது.”
> (பெண் ஏன் அடிமையானாள்? நூல்)

பெண்களுக்கான இந்த உரிமைச் சட்டங்கள் பெண்ணுரிமைக்கான பாதுகாப்புக் கவசங்கள். அதே நேரத்தில் இப்படி ஒரு தீர்ப்பு வந்து விட்டதாலேயே திருமணமான ஒவ்வொரு பெண்ணும் விரும்பும் எந்த ஆணுடனும் தொடர்பு கொள்ள வேண்டும் என்பது இதன் அர்த்தமல்ல. விவாகரத்துக்கான உரிமை சட்டப்படி உண்டு என்பதற்காக திருமணமானவர்கள் அனைவருமே ‘விவாகரத்தை’ கட்டாயமாக்கிக் கொள்வதும் இல்லை. இணைந்து வாழ்வதற்கான வாழ்க்கை முறையைத் தேர்வு செய்ய வேண்டும் என்பதற்கே முன்னுரிமை. ஒரு கணவனின் அல்லது மனைவியின் துன்புறுத்தலை சுமந்து கொண்டே கட்டாயமாக இணைந்து வாழ வேண்டியத் தேவை யில்லை என்ற நிலையில் விவாகரத்து சட்டம் ஒரு கேடயமாகிறது. அதே போன்ற ‘கேடயம்’ தான் 497ஆவது பிரிவை உச்சநீதிமன்றம் நீக்கியிருப்பதாகும்.

அய்யப்பன் கோயிலுக்குள் பெண்கள் செல்லும் தடை உச்சநீதிமன்றத்தால் நீக்கப்பட்டிருப்பது பெண்களின் உரிமைக்குக் கிடைத்த மற்றொரு வெற்றி. இது 63 ஆண்டுகாலப் போராட்டம் . அதற்காக எல்லா பெண்களும் அய்யப்ப பக்தையாகி விரதம் மேற்கொள்ள வேண்டும் என்பது அதற்கான அர்த்தமல்ல. உண்மையில் பெண்களை அடக்கி உரிமைகளைத் தடுத்து வரும் மதக் கட்டமைப்பு - மத நம்பிக்கை - மதச் சடங்குகளிலிருந்து பெண்கள் தங்களை விடுவித்துச் செல்லும்போது தான் பெண்களின் விடுதலை முழுமையடைய முடியும்.

அண்மைக் காலமாக பெண்ணுரிமைக்கு வலிமை சேர்க்கும் உச்சநீதிமன்றத் தீர்ப்புகள் வந்து கொண்டிருக்கின்றன.

2016ஆம் ஆண்டு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.எஸ்.தாக்கூர் தலைமையிலான அமர்வு, அய்யப்பன் கோயிலில் பெண்கள் நுழைய அனுமதி மறுப்பதையும் மும்பையில் ‘ஹஜி அலி தர்கா’ வழிபாட்டுத் தளத்தில் இஸ்லாமிய பெண்கள் நுழைய அனுமதி மறுக்கப்படுவதையும் ஒப்பிட்டுக் காட்டி இது குறித்து மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கூறியது. உச்சநீதிமன்றம் கருத்து தெரிவித்த ஒரு வாரத்தில் தர்காவின் அறக்கட்டளை தாமாக முன் வந்து தர்காவில் கருவறை வரை பெண்களை அனுமதிப்போம் என்று அறிவித்தது. 2017 ஆகஸ்ட் மாதம் உச்சநீதிமன்றத்தில் நீதிபதி கேகர் தலைமையினலான அமர்வு - ‘முத்தலாக்’ கூறி இஸ்லாமிய பெண்களை விவாகரத்து செய்வது சட்ட விரோதமானது என்று அறிவித்தது. இந்த முத்தலாக் ‘புனித குரானுக்கே’ எதிரானது என்று அமர்வில் இடம் பெற்ற நீதிபதி குரியன் ஜோசப் தீர்ப்பில் பதிவு செய்தார்.

அதேபோல் கடந்த ஆண்டு வேறு மதத்தவரை திருமணம்செய்த பார்சி மதத்தைச் சார்ந்த ஒரு பெண், தன்னை மத நீக்கம் செய்த பார்சி சமூகத்தை எதிர்த்து வழக்கு தொடர்ந்தார். தனது தந்தைக்கான இறுதி அஞ்சலியை நடத்திட பார்சிகளின் வழிபாட்டுத் தலமான ‘அமைதி கோபுரத்தில்’ அனுமதி மறுக்கப்பட்டதை எதிர்த்து தொடர்ந்த வழக்கில் உச்சநீதிமன்றம் பார்சி பெண்ணுக்கு சாதகமான தீர்ப்பையே வழங்கியது. இஸ்லாமியர் களில் ஒரு பிரிவினரான ‘போரா’ சமூகத்துப் பெண்கள் வயதுக்கு வரும் போது அவர்கள் ‘பிறப்பு உறுப்பை’ சிதைக்கும் ‘காப்ஸ்’ (Khabz) என்ற காட்டுமிராண்டி வழக்கம், பெண்ணுரிமைக்கு எதிரானது என்று உச்சநீதி மன்ற அமர்வு கடந்த ஆண்டு தீர்ப்பளித்ததும் குறிப்பிட வேண்டிய ஒன்று.

பெண்கள் உரிமைகளை மதங்களால் இனியும் தடுத்து நிறுத்த முடியாது. மதங்களும் அவை வலியுறுத்தும் பாகுபாடும் ஒடுக்குமுறையும் நிறைந்த கோட்பாடுகள் பழக்க வழக்கங்கள் காலாவதியாகி வருகின்றன என்பதற்கு இந்தத் தீர்ப்புகளே சான்றுகளாக நிற்கின்றன. ●


# கழகம் எடுத்த பெரியார் பிறந்த நாள் விழாக்கள்

**ஈரோடு தெற்கு :** 17.09.2018 பகுத்தறிவு பகலவன் தந்தைப் பெரியார் 140ஆவது பிறந்த நாள் விழா ஈரோடு தெற்கு மாவட்டத்தின் சார்பாக வெகு சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது.

காலை, ஈரோடு ப.செ. பூங்கா பெரியார் சிலை வளாகத்திலுள்ள பெரியாரின் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது. பின் தி.க., த.பெ.தி.க., தி.வி.க. அமைப்புகளின் சார்பாக நூற்றுக்கணக்கான தோழர்கள் ஊர்வலமாக பெரியாரின் இல்லத்தை அடைந்து அங்கும் அவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

பின் தி.வி.க. ஈரோடு தெற்கு மாவட்டம் முழுவதும் பத்திற்கும் மேற்பட்ட இடங்களில் கழகக் கொடி ஏற்றப்பட்டு பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி சிறப்புடன் கொண்டாடப்பட்டது.

இரு சக்கர வாகன ஊர்வலத்தில் கருஞ்சட்டை தோழர்கள் பெரியாரை வாழ்த்தி முழக்கமிட்டபடி சென்றதை பொதுமக்கள் ஆர்வமுடன் கண்டு மகிழ்ந்தனர். இறுதியாக சித்தோடு பெரியார் நினைவு சமத்துவபுரத்தில் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து வாகன பேரணியை நிறைவு செய்தனர். இந்நிகழ்வில் மாநில, மாவட்ட பொறுப்பாளர்கள் மற்றும் தோழர்களும் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.



**கீழப்பாவூர் :** நெல்லை மாவட்டம் கீழப்பாவூர் ஒன்றிய திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் பெரியாரின் 140ஆவது பிறந்த நாள் விழாவை குடும்ப விழாவாக 30.09.2018 அன்று கீழப்பாவூரில் நடைபெற்றது. கழகப் பரப்புரைச் செயலாளர் பால் பிரபாகரன் தலைமையில் தந்தை பெரியார் சிலைக்கு தூத்துக்குடி மாவட்டப் பொருளாளர் சந்திரசேகர் இணையர் அனிதா மாலை அணிவித்து மரியாதை செய்தார்.

**நெமிலி :** திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் நெமிலியில் பெரியார் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. மாவட்ட அமைப்பாளர் திலீபன் கலந்து கொண்டு நெமிலி பஸ் நிலையத்தில் உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து பொது மக்களுக்கு இனிப்பு வழங்கினார். நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.

**சேலம் மேற்கு :** காலை 9 மணிக்கு சேலம் மேற்கு மாவட்ட செயலாளர் சி.கோவிந்தராஜ் தலைமையில் சமத்துவபுரத்தில் உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது. மேலும் இரு சக்கர வாகனப் பேரணியும், கொடியேற்று தல் நிகழ்வும் நடை பெற்றது.

**மேட்டூர் பகுதியில் கொடியேற்றிய தோழர்கள் விவரம்:** காவேரி கிராஸ் பெரியார் படிப்பகம் - சுந்தரம், நாட்டாமங்கலம் - 1. காளியப்பன், தூக்கணாம்பட்டி - கணேஷ், காவேரி நகர் - வேணுகோபால், புதுக்காலனி - காவை ஈசுவரன், சிறிய பூங்கா - சூரிய குமார், பெரியார் நகர் - ரவி, வீரபாண்டிய கட்டபொம்மன் நகர் - கதிரேசன், பாரதி நகர் - அ. மாதையன், பொன்னகர் - பாஸ்கர், குமரன் நகர் - சு.குமரப்பா, ஒர்க்ஷாப் - ஆனந்தன், அரசு மருத்துவமனைப் பகுதி - சி. கோவிந்தராஜ், தந்தை பெரியார் பேருந்து நிலையம் - மே.கா.கிட்டு, பெரியார் படிப்பகம் - செ. மார்ட்டின்.

மாலை 4 மணிக்கு 4 ரோட்டிலிருந்து ஊர்வலம் தொடங்கியது. 2 பறை இசைக் குழுக்கள் மற்றும் தோழர்கள், குழந்தைகள், பெண்கள் பெருமளவு கலந்து கொண்டனர். ஊர்வலத்தில் பெரியாரின் பிறந்த நாள் பதாகைகளைத் தோழர்கள் கொண்டு வந்தனர். நகரம் முழுவதும் பெரியாரைப் பற்றிய துண்டறிக்கைகள் 1000 விநியோகிகப்பட்டது. மக்கள் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப் பட்டது.

ஊர்வல நிகழ்வில் காவை, கண்ணாமூச்சி, தார்காடு, தண்டா, நங்கவள்ளி, ஆர்.எஸ்., காவேரி கிராஸ், மேட்டூர் நகரத் தோழர்கள் கலந்து கொண்டனர். ஊர்வலப் பாதையில் உள்ள கடைகளி லிருந்து மக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. ஊர்வல முடிவில் தோழர்கள் அனைவருக்கும் மாட்டுக்கறி பிரியாணி வழங்கப்பட்டது.

**கொளத்தூர் :** கொளத்தூரில் சேலம் மேற்கு மாவட்டத் தலைவர் சூரியகுமார், மாவட்ட அமைப்பாளர் டைகர் பாலன் தலைமையில் இரு சக்கர வாகனப் பேரணி நடைபெற்றது.

**கழகக் கொடியேற்றியோர் விவரம்:** சோதனை சாவடி-சுதா, பெரியார் பேருந்து நிலையம் - சீமா, வடக்கு ராஜ வீதி - நல்லதம்பி, திருவள்ளுவர் நகர் - சுப்பிரமணி, உக்கம் பருத்திக்காடு - சித்ரா, தார்க்காடு - குமார், இலக்கம்பட்டி - மந்திரி, நீதிபுரம் - சக்தி.

வாகனப் பேரணியில் பொது மக்களுக்கு துண்டறிக்கைகளும் இனிப்புகளும் வழங்கப்பட்டது.

**சேலம் கே.மோரூர் :** தந்தை பெரியாரின் 140ஆவது பிறந்தநாள் விழாக் கூட்டம் சேலம் ஓமலூர் அருகே உள்ள கே.மோரூரில் கடந்த 23.09.2018 அன்று மாலை நடைபெற்றது.

முதல் நிகழ்வாக முனைவர் சுந்தரவள்ளி புரட்சியாளர் அம்பேத்கர் சிலைக்கு பறை முழக்கத்தோடு மாலையிட நிகழ்வு தொடங்கியது. டி.கே.ஆர் பறையிசைக் குழுவினரின் ஆதிப் பறையிசை , கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. பகுதி பொதுமக்கள் பெருமளவில் கலந்து கொண்டனர். தொடர்ச்சியாக காவை இளவரசனின் மந்திரமா ? தந்திரமா? நிகழ்ச்சியின் மூலம் மூடநம்பிக்கை மற்றும் போலிச் சாமியார்களின் முகத்திரையை கிழித் தெறிந்தார். சிறுவர்கள் மிகவும் கலகலப்புடன் இந்நிகழ்வை சற்றும் நகராமல் கண்டனர்.

புலவர். மாணிக்கம் முன்னிலையில் விடுதலை. ஜான் (விசிக தொண்டரணி செயலாளர்) வரவேற் புரை வழங்க, கழக செயற்பாட்டாளர் இரண்யா தலைமையில் நிகழ்ச்சி தொடங்கியது.குமரேசன் நிகழ்வைத் தொகுத்து வழங்கினார். முனைவர் சுந்தர வள்ளி சிறப்புரையாற்றினார். கருப்பும், சிவப்பும், நீலமும் காலத்தின் கட்டாயம் என்பதை மக்கள் மத்தியில் அவருக்கே உரிய வார்த்தை வீச்சுகளின் மூலம் பெரியார், அம்பேத்கர், மார்க்ஸ் என மக்களுக்கு விளங்கும் வகையில் எடுத்துரைத்தார். இறுதியாக முருகன் நன்றியுரை கூற நிகழ்வு சிறப்பாக முடிந்தது. கழக செயற்பாட்டாளர் இரண்யாவின் சொந்த கிராமம் அது. அவரே முன்னின்று அனைத்துக் கூட்ட ஏற்பாடுகளையும் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**திருப்பூர் :** தந்தை பெரியாரின் 140ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, சென்ற வாரம் மழையின் காரணமாக விடுபட்ட இடங்களான சந்தை பேட்டை, தென்னம்பாளையம், குளத்துப் பாளையம், முருகம்பாளையம், இடுவம்பாளையம், வீரபாண்டி பிரிவு ஆகிய இடங்களில் 30.9.2018 அன்று கொடியேற்று விழா நடைபெற்றது. தோழர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

மாலை 4 மணிக்கு தொடங்கி இரவு 7 மணி வரை கொடியேற்றி கழகப் பொருளாளர் துரைசாமி தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

# கழகத் தலைவர் கொளத்தூர் மணி பங்கேற்ற நிகழ்ச்சிகள்

திராவிட அரசியலின் பெருமைக்குரிய அடையாளம் கருஞ்சட்டைக் கலைஞர் என்ற தலைப்பில் செப்டம்பர் 30ஆம் தேதி திருச்செங்கோட்டில் கருத்தரங்கம் நடைபெற்றது.




திருச்செங்கோடு ஒன்றிய செயலாளர் து.சதிசுகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த கருத்தரங்கின் தொடக்கத்தில் பெரியார் பிஞ்சு இரா.தர்சினி வரவேற்புரையாற்றினார். கழகத்தின் மாவட்ட தலைவர் மு.சாமிநாதன் மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் திருச்செங்கோடு நகர பொறுப்பாளர் கார்த்திகேயன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாமக்கல் மேற்கு மாவட்ட செயலாளரும், பரமத்தி வேலூர் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி மற்றும் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கலைஞரின் செயல்பாடுகளை விளக்கி சிறப்புரையாற்றினர். முன்னதாக தமிழ்நாடு அறிவியல் மன்ற பொறுப்பாளர் சிவகாமி, நாமக்கல் மாவட்ட அமைப்பாளர் மா.வைரவேல் ஆகியோரும் உரையாற்றினர்.


சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.மூர்த்தி பேசுகையில், “காவிகளை தமிழகத்துக்குள் நுழைய அனுமதிக்க மாட்டோம் என்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின், தலைவராக பொறுப்பேற்றபோது உறுதியளித்திருக்கிறார். அவருடைய பாதையில் நாங்களும் காவிகளை எதிர்க்க உறுதியாய் செயல்படுவோம்” என்றார். திராவிடத்தால் தமிழ்நாடு பின்தங்கிவிட்டது என்ற பொய்ப்பிரச்சாரத்தை தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் பார்ப்பனிய இந்துத்துவவாதிகளுக்கும், போலித் தமிழ்தேசியவாதிகளுக்கும் பதில் கூறும் விதமாக வரலாற்று ஆதாரங்களுடன் சுமார் 2 மணிநேரம் கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினார். அடித்தட்டு மக்களைப் பற்றிய கலைஞரின் பார்வை எவ்வாறு இருந்தது என்பதையும், 50 ஆண்டுகால திராவிட ஆட்சியில் வட மாநிலங்களுடன் ஒப்பிடவே இயலாத அளவுக்கு தமிழகம் மிகப்பெரிய வளர்ச்சி கண்டிருக்கிறது என்பதையும் புள்ளிவிவரங்களுடன் தனது உரையில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி குறிப்பிட்டார். இறுதியாக திருச்செங்கோடு நகர கழகத் தோழர் பூபதி நன்றியுரையாற்றினார்.

இந்த நிகழ்வில் ஆதித் தமிழர் பேரவை துணைப் பொதுச் செயலாளர் செல்வ வில்லாளன், திராவிடர் விடுதலைக் கழகத்தின் ஈரோடு வடக்கு மாவட்ட தலைவர் நாத்திக ஜோதி, ஈரோடு தெற்கு மாவட்ட செயலாளர் சண்முகப்பிரியன், நாமக்கல் மாவட்ட செயலாளர் மு.சரவணன், பள்ளிபாளையம் நகரத் தலைவர் பிரகாசு மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பொறுப்பாளர்கள், தோழர்கள் உள்ளிட்ட 70க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

16-9-2018 ஞாயிறு அன்று, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திருச்சி கே.சவுந்தரராஜன், அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம், கவரபாளையத்தில் கட்டியுள்ள பெரியார்-அண்ணா அரங்கத்தின் திறப்புவிழா நடைபெற்றது. அரங்கத்தின் முன்புறம் நிறுவப்பட்டுள்ள பெரியார், அண்ணா. எம்.ஜி.ஆர்., காமராசர் சிலைகளின் திறப்புவிழா அன்று மாலை 5.00 மணியளவில் நடந்தது. தந்தை பெரியாரின் சிலையை கழகத் தலைவர் கொளத்தூர் மணி, அறிஞர் அண்ணாவின் சிலையை முனைவர் மணியம், காமராசர் சிலையை சி.பி.எம். கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் டி.கே.ரங்கராஜன், முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். சிலையை முன்னாள் அமைச்சர் எஸ்.ஆர்.இராதா திறந்து வைத்து உரையாற்றினர். விழாவில் ம.தி.மு.க அமைப்புச் செயலாளர் வந்தியத்தேவன், சென்னை வழக்கறிஞர் அஜிதா, தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் பாலகுருசாமி ஆகியோரும் கருத்துரையாற்றினர். இரவு 9 மணியளவில் டி.கே.எஸ். சகோதரர்கள் நாடகக் குழுவினரின், அறிஞர் அண்ணாவின் ‘சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம்” நாடகம் மிக சிறப்பாக நடைபெற்றது.



22.9.2018 சனிக்கிழமை, முற்பகல் 11-00 மணியளவில், திருவண்ணாமலை, நல்லவன்பாளையம், காந்திமதி அரங்கில் கழகத் தோழர் அ.சத்தியராஜ் எம்.ஏ., பி.எல்., -வெ.ஷீலா பி.எஸ்.சி (அக்ரி) ஆகியோரின் சடங்கு மறுப்பு, தாலி மறுப்பு இல்லற இணையேற்பு விழா, கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடந்தேறியது. விழாவில் பு.இ.மு வழக்குரைஞர் கல்விச் செல்வன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சுரேஷ்குமார், வி.சி.க. நாடாளுமன்ற தொகுதி செயலாளர் ஏ.நேரு, கழகத் தலைமைக் குழு உறுப்பினர் அய்யனார், செஞ்சி கழகத் தோழர் சாக்ரடீசு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். புரட்டாசி மாதம் முதல் சனிக்கிழமையில் நடைபெற்ற அந்நிகழ்வின் நிறைவில் அனைவருக்கும் புலால் உணவு வழங்கப்பட்டது.





நாகை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக அமைப்பாளர் அன்பரசன் (அன்பு ஏகலைவன்) - இளமதி வாழ்க்கை இணை ஏற்பு நிகழ்வு 2.9.2018 ஞாயிறு காலை 10 மணியளவில் மயிலாடுதுறை கோவிந்தம்மாள் திருமண மண்டபத்தில் நிகழ்ந்தது. தலைமைக் குழு உறுப்பினர் இளையராஜா வரவேற்புரையாற்ற கழகத் தலைவர் கொளத்தூர் மணி, மணவிழாவை நடத்தி வைத்தார். பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் வாழ்த்துரை வழங்கினார்.

### சென்னை கருத்தரங்கில் விடுதலை இராசேந்திரன் உரை (4)

# கலைஞர் சந்தித்த ‘ஜாதிய–பாகுபாடுகள்’

*தம்மம் சிந்தனையாளர் பேரவை சார்பில் ‘கலைஞரின் பன்முக ஆளுமை’ என்ற தலைப்பில் கருத்தரங்கம் செப்.8, 2018 மாலை 5 மணியளவில் பெரியார் திடலில் உள்ள மணியம்மையார் அரங்கில் நடைபெற்றது.*

*விடுதலை இராசேந்திரன் பங்கேற்று நிகழ்த்திய உரை. (சென்ற இதழ் தொடர்ச்சி)*

1990களில் உலகமயமாக்கல் எனும் தாராளமயக் கொள்கையை அன்றைய நரசிம்மராவ் ஆட்சி இந்தியாவுக்குள் கதவு திறந்து விட்டது. அதன் பிறகு, கல்வி, மருத்துவம் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் அரசு ஒதுங்கிக் கொண்டு, தனியார் துறைகள் மேலாதிக்கம் பெறத் தொடங்கின. இந்தப் பின்னணியில் 1996-2001ஆம் ஆண்டு ஆட்சி அதிகாரத்துக்கு வந்த கலைஞரின் செயல்திட்டங்கள் மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. தமிழகத்தின் மிகச் சிறந்த நிர்வாகம் நடைபெற்ற காலமாக இது, இன்றளவும் பேசப்படுகிறது. தனியார் துறை வேகமாக வளர்ந்து கல்வியை தனியார் மயமாக்கிய அக்காலக் கட்டத்தில் தமிழ்நாட்டில் அரசுப் பல்கலைக்கழகங்களை அதிகமாகத் தொடங்கினார் கலைஞர்.

1989இல் மனோன்மணியம் சுந்தரனார் பெயரில் திருநெல்வேலியிலும், 2000-த்தில் பெரியார் பெயரில் சேலத்திலும், 2008இல் திருவள்ளுவர் பெயரில் வேலூரிலும் பல்கலைக்கழகங்களை உருவாக்கினார். கல்வியியல் தொடர்பான ஆய்வுகள், அதனடிப்படையில் உருவாக்கப்பட்ட கல்விக் கொள்கைகள் தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு அடிப்படையாக இருந்தன. இதை மேம்படுத்தி சென்னையில் தமிழ்நாடு கல்வியியல் பல்கலைக்கழகம் ஒன்றையும் தொடங்கினார். மற்றொரு முக்கிய செய்தியைக் குறிப்பிட வேண்டும். அம்பேத்கர் பிறந்த மாநிலமான மகாராஷ்டிராவில் உள்ள மரத்வாடா பல்கலைக் கழகத்துக்கு அம்மாநில ஆட்சி அம்பேத்கர் பெயர் சூட்ட முன் வந்தபோது ஜாதிவெறி சக்திகள் அதைக் கடுமையாக எதிர்த்து வீதிக்கு வந்து போராடிய அதே காலத்தில், 1997இல் சென்னையில் டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தை உருவாக்கிக் காட்டினார். பல்கலைக்கழகங்களில் நேரடியாக பட்ட மேற்படிப்புப் படிக்கும் வாய்ப்புகள் உயர்ஜாதி மேல்தட்டு வர்க்கத்துக்கே கிடைத்து வந்தன. அதுவும் சென்னை மாநகரத்துக்கு மட்டுமே இந்த பல்கலைக்கழக பட்டமேற்படிப்பு வாய்ப்புகள் இருந்தன. இந்த வாய்ப்புகள் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் கிடைத்திட வேண்டும் என்ற சமூக நீதிப் பார்வையோடு திருச்சி, கோவை நகரங்களிலும் சென்னைப் பல்கலைக்கழகத்தின் பட்டமேற்படிப்பு மய்யங்களை 1972இல் விரிவாக்கினார். ஒடுக்கப்பட்ட சமூகத்தினர் உயர்கல்வியிலும் ஆராய்ச்சியிலும் ஈடுபட இந்த முயற்சிகள் வழி வகுத்தன. 1982இல் இந்த மய்யங்கள் பாரதிதாசன், பாரதியார் பல்கலைக் கழகங்களாக மேம்படுத்தப்பட்டன. கோவையில் செயல்பட்ட விவசாயக் கல்லூரியை 1971இல் விவசாயப் பல்கலைக்கழகமாக்கி அதன் உறுப்புக் கல்லூரிகளை தமிழகம் எங்கும் தொடங்கி, விவசாய ஆராய்ச்சிகளுக்கு உரமூட்டினார். ஆசியாவிலேயே முதல் விவசாயப் பல்கலைக்கழகம் அமைந்தது தமிழ்நாட்டில்தான். அதுவும் கலைஞர் ஆட்சியில் தான்.

வேளாண்மையோடு நெருக்கமான தொடர்புடைய சென்னை, நாமக்கல்லில் செயல்பட்ட கால்நடை மருத்துவக் கல்லூரிகளை இணைத்து முதன்முதலாக கால்நடை மருத்துவப் பல்கலைக் கழகத்தை தமிழ்நாட்டில் உருவாக்கினார். மற்றொரு முக்கிய செய்தியை அவரது நிர்வாகத் திறனுக்கு சான்றாகக் குறிப்பிட வேண்டும். வளர்ந்து வந்து கொண்டிருக்கும் தகவல் தொழில்நுட்பத் துறை ஒரு புரட்சியை உண்டாக்கப் போகிறது என்பதை உணர்ந்து இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் 1997இல் முதன்முதலாகத் தகவல் தொழில்நுட்பத் துறைக்கான கொள்கை உருவாக்கப்பட்டது. அதற்கு ஏழு ஆண்டுகளுக்குப் பிறகுதான் வாஜ்பாய் ஆட்சிக் காலத்தில் இந்தியா முழுமைக்குமான தேசிய தகவல் தொழில்நுட்பக் கொள்கை உருவாக்கப்பட்டது என்பதைக் குறிப்பிட வேண்டும் என்கிறார். தமிழ்நாட்டின் மிகச் சிறந்த கல்வியாளரான அனந்தகிருட்டிணன், “கல்வியாளர்களுக்கு மிகப் பெரிய மதிப்பளிப்பவர் கருணாநிதி (அனந்த கிருட்டிணன்) சந்திக்க வந்தால், இரண்டு நிமிடங்களுக்கு மேல் அவர் காத்திருக்கும் சூழல் இல்லாதபடி அவருக்கான நேரத்தை ஒதுக்குங்கள் என்று கலைஞர் சொல்லியிருந்ததை அதிகாரிகள் எனக்குச் சொல்லி இருக்கிறார்கள்” என்று ஒரு பேட்டியில் குறிப்பிட்டிருக்கிறார்.

நிதி ஒதுக்கீடு அதிகாரங்களை தனது கையில் வைத்திருக்கிறது நடுவண் ஆட்சி. இதற்கு மாற்று நிறுவனங்களை உருவாக்கியதில் முன்மாதிரியாக இருந்தது தமிழ்நாடு. அதுதான் மாநிலத் திட்டக் குழு. இந்தியாவிலேயே ஒரு மாநிலத்துக்கான திட்டக்குழு அமைந்தது தமிழகத்தில்தான். நீதிபதி இராஜமன்னார் தலைமையிலான ஒரு குழுவை அமைத்து மாநிலங்களுக்கு சுயாட்சி அடிப்படையில் அதிகாரங்களை வரையறுத்து, அதைத் தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானமாக நிறைவேற்றினார் கலைஞர். இதே பிரச்சினைக்காக இந்திரா காந்தி சர்க்காரியா ஆணையம் ஒன்றை நியமித்தார். அந்த ஆணையத்தின் மீது கருத்து தெரிவித்த மேற்குவங்கம், கருநாடகம் போன்ற மாநில அரசுகள், தி.மு.க. ஆட்சியில் கலைஞர் நியமித்த இராஜமன்னார் குழு பரிந்துரைகளையே எடுத்துக் காட்டின.

பள்ளிப் படிப்பைக் கூட முடித்திடாதவர் கலைஞர். திண்ணைப் பள்ளிக்கூடப் படிப்போடு, பள்ளிக்கு விடைக் கொடுத்தவர் பெரியார். அந்த பெரியார்தான் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான கல்விக்கான இடஒதுக்கீட்டு உரிமையை தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, இந்தியா முழுமைக்குமே அரசியல் சட்டத்தை முதன் முறையாகத் திருத்த வைத்து பெற்றுத் தந்திருக்கிறார் என்ற வரலாற்றை எவராலும் மறுத்து விட முடியாது.

ஒடுக்கப்பட்ட சமூகத்தால் மிகவும் புறக்கணிக்கப்பட்ட தமிழக மக்கள் தொகையில் ஒரு சதவீதம்கூட இல்லாத ஒரு சமூகப் பிரிவிலிருந்து வந்த ஒருவர், தமிழகத்தின் அரசியல் உச்சத்தைத் தொட்டு இந்தியாவின் பிரதமர்களைத் தேர்ந்தெடுக்கும் நிலைக்கு உயர முடிந்தது என்றால், அதுதான் திராவிட இயக்கத்தின் சாதனை. இசைக் குடும்பத்தில் பிறந்த அவரை இளம் வயதில் இசைப் பயிற்சிக்கு அனுப்பி வைத்தார், அவரது தந்தை முத்துவேலர். அப்போது இசைப் பயிற்சிகள் கோயிலுக்குள் நடக்கும். இளம் வயதிலேயே தனக்கு ஜாதி காரணமாக இழைக்கப்பட்ட அவமானங்கள், அவரது சுயமரியாதையைப் பாதிக்கச் செய்தது. அந்த அவமதிப்புகள், பெரியார் இயக்கத்தை அவரைத் திரும்பிப் பார்க்க வைத்தது. இதுபற்றி கலைஞரே இவ்வாறு எழுதுகிறார்:

“உண்மையிலேயே எனது இசைப் பயிற்சி வகுப்புகளே எனது முதல் அரசியல் வகுப்புகளாகவும் இருந்தன. ஜாதி அடிப்படையில் மனிதர்கள் எப்படி இழிவுபடுத்தப்படுகிறார்கள் என்பதை நேரடியாக எனக்கு நேர்ந்த அவமானங்களால் உணர்ந்தேன். தங்களுக்கான பழக்கங்கள், சடங்குகள் என்ற பெயரில் அடுத்தவர்களின் சுயமரியாதையை உரிமையை களங்கப்படுத்தினார்கள். இப்படி அவமதிக்கிறோமே என்ற உணர்வுகள்கூட அவர்களுக்கு ஏற்படுவதில்லை” என்று கலைஞர் குறிப்பிடுகிறார்.

“கோயிலுக்குள் இசைப் பயிற்சிக்கு வரும்போது சட்டைப் போடாமல் இடுப்பில் துண்டைக் கட்டிக் கொண்டு, அடுத்தவர் மீது கைபடாமல் இருக்க வேண்டும். அதே நேரத்தில் பார்ப்பன உயர்ஜாதி சிறுவர்களுக்கு இந்தத்தடைகள் ஏதும் இல்லை. காலில் செருப்பு அணியும் உரிமைகூட மறுக்கப் பட்டது. வகுப்பில் முன்வரிசையில் அமரும் உரிமை பார்ப்பனருக்கும் உயர்ஜாதியினருக்கும் மட்டுமே உண்டு. பாடல்களில்கூட ஒடுக்கப்பட்ட ஜாதியினருக்காகவே பாடல்கள் ஒதுக்கப்பட்டன. இறைவன் திருவடியை அடைவதற்கும், மோட்சம் போவதற்குமாக பக்திப் பாடல்கள் பயிற்றுவிக்கப்பட்டாலும் அதைப் பயிற்றுவிக்கும் வகுப்புகள், ஜாதியடிப்படையிலேயே நிறுவப்பட்டிருந்தது. திருக்குவளை கிராமத்தில் மூன்று ஆண்டுகள் எனக்கு இசைப் பயிற்சி வழியாகக் கிடைத்த கசப்பான பாடங்கள், ஜாதிக் கொடுமை என்னும் புண்ணுக்குப் புனுகு பூசுவதால் பயனில்லை; அறுவை சிகிச்சைத் தேவை என்பதை எனக்கு உணர்த்தின” என்று கூறுகிறார் கலைஞர்.

கலைஞர் அளித்த பல்வேறு பேட்டிகளின் தொகுப்பை, ‘தமிழ் இந்து’ வெளியிட்ட ‘தெற்கிலிருந்து ஒரு சூரியன்’ மலர் வெளியிட்டிருக்கிறது. அதில் ஒரு பகுதியை மட்டும் குறிப்பிட்டு, எனது உரையை நிறைவு செய்கிறேன்.

*கேள்வி : பிடிவாதக் குணம் எப்படி வந்தது?*

**அம்மா, அப்பா, அப்புறம் அன்றைக்குத் தொடங்கி என்னை விரட்டிக் கொண்டிருக்கும் சாதியப் பாகுபாடுகள்,. ஆமாம் சாதியப் பாகுபாடுகள் என் மீது போட்டிருந்த விலங்குகளை உடைக்க வேண்டும் என்றால், அயராத போராட்டம்தான் அதற்கு ஒரே வழி என்பதைத்தான் என்னுடைய வாழ்க்கை எனக்குச் சொல்லிக் கொடுத்தது.**

*இன்றைக்கும் ஜாதிப் பாகுபாடுகள் உங்களை விரட்டுகிறதா?*

**ஆமாம். உயர்ந்த தலைவர், தேசியத் தலைவர் பலரிடமும்கூட சாதியப் பாகுபாட்டை மிகத் தெளிவாக உணர்ந்திருக்கிறேன். தி.மு.க. மீதான பலரின் காழ்ப்புணர்வுக்குப் பின்னணியிலும்கூட என்னைப் போன்ற ஒரு எளியவன் தலைமையில் அது இயங்குவதைத் தாங்கிக் கொள்ள முடியாத ஆற்றாமை இருப்பதை உணருகிறேன். எவ்வளவு உயரம் போனாலும், இங்கு சாதியம் பின்னின்று நடத்தும் அரசியலை உணர்ந்திருப்பதால்தான், சமூக நீதிக்காக எவ்வளவு தூரம் செல்லவும் நாங்கள் தயாராக இருக்கிறோம். எவ்வளவோ காரியங்களைச் செய்திருந்தாலும் இந்தியாவில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை வலியுறுத்தி வெற்றி கண்டதைப் பெரிய சாதனையாக நாங்கள் நினைப்பதும் அதனால்தான்.**

*அரசியலில் சாதியின் ஆதிக்கத்தை ஒழிக்கவே முடியாதா?*

**சாதியின் ஆதிக்கத்தை மட்டுமல்ல; மதத்தின் ஆதிக்கத்தையும் ஒழித்தாக வேண்டும். இதில் அனைத்து அரசியல் கட்சிகளும் சமுதாய இயக்கங்களும் அப்பழுக்கற்ற ஆர்வமும், செய்தே தீரவேண்டும் என்ற பிடிவாதமும் கொள்ள வேண்டும். அப்போதுதான் நிலைமையைச் சீர்திருத்த வழி உண்டு. இன்றைக்கு ஊற்றப்படுகிற தண்ணீரும், தொடர்ந்து இடப்படுகிற உரமும் எதிர்காலத்தில் நிச்சயமாகப் பயன்படும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.**

*கடைசியாக,* ***‘கருணாநிதி, சிறுகுறிப்பு வரைக’*** *என்ற கேள்விக்கு அவர் அளித்த ஒரே வரி பதில் இதுதான்.*

**‘மானமிகு சுயமரியாதைக்காரன்.’**

**(நிறைவு)**

## எச்.ராஜாவின் சுவரொட்டிகள்: பா.ஜ.க.வினரே அகற்றினர்

*திருப்பூரில் பெரியார் சிலையின் சுற்றுச் சுவற்றில் ஒட்டப்பட்டிருந்த எச்.ராஜாவின் பிறந்தநாள் சுவரொட்டிகள் பா.ஜ.க.வினரை வைத்தே கிழித்தெறியப் பட்டது.*

தமிழகம் முழுவதும் பெரியார் சிலையை சேதப்படுத்தல் மற்றும் சிலையை அவமானப்படுத்தும் விதத்தில் இந்துத்துவவாதிகள் தொடர்ந்து செயல்பட்டு வருகிறார்கள். இந்நிலையில் திருப்பூர் ரயில் நிலையத்தின் முன்பு தந்தை பெரியார் மற்றும் அறிஞர் அண்ணாசிலை உள்ளது. இந்த சிலைகள் உள்ள இடத்தின் சுற்றுச்சுவரில் வெள்ளியன்று பாஜக தேசிய செயலாளர் எச்.ராஜா பிறந்தநாள் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தது. திட்டமிட்டு வன்முறையை உண்டாக்கும் வகையில் இந்துத்துவவாதிகளால் மேற்கொள்ளப்பட்டிருந்த இந்த செயலை அறிந்த பெரியாரிய அமைப்பினர் அவ்விடத்தில் ஒன்று திரண்டு போராட்டத்திற்கு தயாராகினர். இதற்கிடையே, இதுகுறித்து தகவலறிந்த திருப்பூர் வடக்கு காவல் துறையினர் சம்பவ இடத்திற்கு வந்து பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது, வன்முறையை தூண்டுவதற்காக திட்டமிட்டு ஒட்டப்பட்டுள்ள இந்த சுவரொட்டிகளை பாஜகவினரே கிழித்து எறிய வேண்டும் என பெரியார் அமைப்பினர் வலியுறுத்தினர். இதையடுத்து பாஜக நிர்வாகிகளிடம் பேசிய காவல்துறையினர், அக்கட்சியைச் சேர்ந்தவர்களை வரவழைத்தனர். பின்னர். எச்.ராஜாவின் படத்துடன் ஒட்டப்பட்ட சுவரொட்டியை அக்கட்சியினரே கிழித்து எறிந்தனர். அப்போது, பாஜக மற்றும் ஆர்எஸ்எஸ் அமைப்பின் இழி செயல்களை கண்டித்து பெரியாரிய அமைப்பைச் சேர்ந்தவர்கள் முழக்கங்கள் எழுப்பினர். பின்னர் கிழித்த சுவரொட்டிகளை அதே இடத்தில் தீ வைத்து எரித்து தங்களது எதிர்ப்பை பதிவு செய்தனர். மேலும், அந்த சுவரொட்டி ஒட்டியவர்கள் மீது நடவடிக்கை கோரி திருப்பூர் வடக்கு காவல் நிலையத்திலும் புகார் அளித்தனர். திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் தோழர் முகில்ராசு கண்டன முழக்கமெழுப்பி களத்தில் காவிகளின் சேட்டையை முறியடித்தார்

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# பெரியார் - திராவிட இயக்கம் குறித்து நடந்த இரண்டு நாள் ஆய்வரங்கம்

பெரியார் திராவிட இயக்கம் குறித்து இரண்டு நாள் ஆய்வரங்கம் ‘திராவிட அரசியல் வரலாற்றுத் தடங்கள்’ என்ற தலைப்பில் 2018 செப்டம்பர் 29, 30 ஆகிய இரு நாட்களிலும் சென்னை இராஜா முத்தையா ஆராய்ச்சி நூலக வளாக அரங்கில் நடைபெற்றது. சமூக மாற்றத்துக்கான ஆய்வு நடுவம், சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் இராஜா முத்தையா ஆராய்ச்சிக் கழகம் ஒருங் கிணைந்து நடத்திய இந்த ஆய்வரங்கில் பல்வேறு தலைப்புகளின் கீழ் ஆய்வாளர்கள் ஆய்வுரை வழங்கினர். அது குறித்து விவாதங்களும் நடந்தன.

செப். 29 அன்று காலை 10 மணிக்கு ‘பொது மன்றமும் மாறும் சமூக அடையாளங்களும்’ தலைப்பில் தொடங்கிய முதல் அமர்வை முனைவர் ராஜன்குறை நெறியாள்கை செய்தார். வீ.எம்.எஸ். சுபகுணராஜன் - ‘பெரியார் ஜாதிச் சங்கங்களும் ஜாதி ஒழிப்பும்’ என்னும் தலைப்பிலும், பேராசிரியர் ஜி.அலோசியஸ் - ‘சூத்திரத் தன்மையிலிருந்து சுயமரியாதைக்கு’ என்னும் தலைப்பிலும், பேராசிரியர் சுந்தர் காளி - ‘தமிழகத்தில் பொது மன்ற உருவாக்கமும் திராவிட இயக்கமும்’ என்கிற தலைப்பிலும் ஆய்வுரைகளை வழங்கினர்.

இரண்டாம் அமர்வின் தலைப்பு ‘கல்வியும் - அரசியல் வெளியும்’ என்பதாகும். வீ.எம்.எஸ். சுபகுண ராஜன் நெறியாள்கை செய்த இந்த அமர்வில், முனைவர் பழ. அதியமான் - ‘சேரன்மாதேவி குருகுலப் போராட்டம்’ என்னும் தலைப்பிலும், முனைவர் எஸ். ஆனந்தி - ‘கல்வியும் சமூக நீதியும்; குலக்கல்வி எதிர்ப்புப் போராட்டங்கள்’ என்னும் தலைப்பிலும் , முனைவர் ஆ.இரா. வேங்கடாசலபதி - ‘தி.க. தி.மு.க. இரட்டைக் குழல் துப்பாக்கி’ என்னும் தலைப்பிலும் ஆய்வுரை வழங்கினர்.

மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு மூன்றாம் அமர்வு முனைவர் ரவீந்திரன் ஸ்ரீராமச்சந்திரன் நெறியாள்கையில் ‘பார்ப்பனரல்லாதார் தீண்டாமை’ என்னும் தலைப்பில் நிகழ்ந்தது. முனைவர் ஆ. நீலகண்டன் - ‘நீடாமங்கலம் ஜாதிக் கொடுமையும் சமூக உருவாக்கமும்’ என்னும் தலைப்பிலும், முனைவர் ஆர்.எம். கார்த்திக் - ‘பார்ப்பனர் மீதான விமர்சனம்’ என்னும் தலைப்பிலும் ஆய்வுரை வழங்கினர். நிகழ்வின் இறுதியில் வீ.எம்.எஸ். சுபகுணராஜன் எழுதிய “சாதியும் நிலமும் காலனியமும் மூலதனமும்’ என்ற நூல் வெளியிடப்பட்டது. முனைவர் ஜெயரஞ்சன், நூல் மதிப்புரை செய்தார். பார்வையற்ற முற்போக்காளர் அமைப்பு குரல் ஒலி நாடாவாகப் பதிவேற்றம் செய்துள்ள ‘பெரியார்: இன்றும் என்றும்’ நூல் ஒலிப்பதிவும் இணைய இதழான ‘தமிழ்’ வெளியிட்ட ‘கலைஞர்’ சிறப்பிதழ் குறித்த திறனாய்வும் இடம் பெற்றன. பூ.கோ. சரவணன், அய்.ஆர்.எஸ். திறனாய்வு செய்தார்.

**இரண்டாம் நாள் :** இரண்டாம் நாள் செப்.30 அன்று காலை 10 மணியளவில் நான்காம் அமர்வு ‘திராவிட இயக்கத்தின் வீச்சும் தடங்களும்’ என்னும் தலைப்பில் தொடங்கியது. முனைவர் ஆனந்தி நெறியாள்கை செய்தார். ‘பிரண்ட் லைன்’ ஆசிரியர் விஜயசங்கர் இராமச்சந்திரன் - ‘சுயமரியாதை சமதர்மம்’ என்னும் தலைப்பிலும், எஸ்.அன்வர் - ‘திராவிட இயக்கமும் இஸ்லாமியமும்’ என்னும் தலைப்பிலும் பேராசிரியர் சரசுவதி - ‘பெண்களும் திராவிட இயக்கமும்’ என்னும் தலைப்பிலும் ஆய்வுரை வழங்கினர். தேநீர் இடைவேளையைத் தொடர்ந்து அய்ந்தாம் அமர்வு - ‘திராவிட ஆட்சியும் பொருளாதார வளர்ச்சியும்’ என்னும் தலைப்பில் முனைவர் சுந்தர்காளி நெறியாள்கையில் தொடங்கியது. முனைவர் ஜெயரஞ்சன் - ‘குத்தகையாளர் உரிமை நில உடைமை’ என்னும் தலைப்பிலும், முனைவர் கலையரசன் - ‘திராவிட வெகுஜன அரசியலும் சமூகநலத் திட்டங்களும்’ என்னும் தலைப்பிலும், முனைவர் எம். விஜயபாஸ்கர் - ‘திராவிட ஆட்சியில் பொருளாதார கட்டமைப்பு மாற்றங்கள்’ என்னும் தலைப்பிலும் ஆய்வுரை வழங்கினர்.

மதிய உணவுக்குப் பிறகு தொடங்கிய ஆறாம் அமர்வு, ‘தமிழகம்: பன்மை அடையாளமும் கூட்டாட்சியும்’ என்னும் தலைப்பில் நடந்தது. முனைவர் எம். விஜயபாஸ்கர் நெறியாள்கை செய்தார். முனைவர் இரவீந்திரன் - ‘பன்மையுறும் மொழி அடையாளம்’ எனும் தலைப்பிலும், ‘இந்து’ வாசகர் ஆசிரியர் ஏ.எஸ். பன்னீர்செல்வன் ‘திராவிட இயக்கமும் கூட்டாட்சி தத்துவமும்’ எனும் தலைப்பிலும், முனைவர் ராஜன் குறை ‘தமிழ் அகம்: இறையாண்மையின் இரு பொருள் தன்மை’ எனும் தலைப்பிலும் ஆய்வுரை வழங்கினர்.

வீ.எம்.எஸ். சுபகுணராஜன், இந்த ஆய்வரங்கை ஒருங்கிணைத்தார். இரு நாட்களிலும் 200 பார்வையாளர்கள் பங்கேற்று அரங்கம் நிரம்பி வழிந்தது. 200 ரூபாய் பயிற்சியாளர்கள் கட்டணம் செலுத்தி, 150 பேர் இருநாள் அமர்விலும் பங்கேற்றனர் என்பதும், இவர்கள் பெண்-ஆண் இளைஞர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. அரங்கத்தில் இளைஞர்கள் கூட்டமே மிகுந்திருந்தது.

பெரியாரியப் பார்வையில் திராவிட அரசியல், சுயமரியாதை இயக்கம் - அதன் சமூகத் தாக்கங்களை விரிவாக அலசிய இந்த ஆய்வரங்கம் வளர்ந்து வரும் புதிய நவீனத்துவம் - சமூகவியல் கோட்பாடுகளின் கண்ணோட்டத்தில் ஆய்வுக்கு உட்படுத்தியது இந்த அரங்கின் சிறப்பு ஆகும். மாறி வரும் புதிய சமூக சர்வதேச சூழலில் பெரியாரியம், திராவிடவியல் கோட்பாடுகளுக்கு புதிய வெளிச்சங்களை யும் அதன் தேவைகளையும் ஆழமாக விவாதித்தன இந்த ஆறு அமர்வுகளும். அண்மைக்கால பெரியாரிய திராவிடர் இயக்க வளர்ச்சிப் போக்கில் இந்த அமர்வு புதிய பாதையைக் காட்டியிருக்கிறது என்றே பார்வையாளர்கள் கருத்து தெரிவித்தனர். ஆய்வு உரைகள் தொகுக்கப்பட்டு, நூல் வடிவம் பெறும் என்று சுப.குணராஜன் அறிவித்தார்.

**– நமது செய்தியாளர்**

## கழக வளர்ச்சிக்கு நன்கொடை

கருவூலத் துறை கணக்கு அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்றவரும் மயிலாடுதுறையில் பகுத்தறிவாளர் கழகப் பொறுப்பாளராக செயல்பட்டவருமான பெரியாரியலாளர் அரங்கராசன் கழக வளர்ச்சிக்கு ரூ.15,000 நன்கொடை வழங்கினார்.

ஓய்வு பெற்ற ஆசிரியரும் அன்னை மணியம்மையார் நடத்திய இராவண லீலா விழா மேடையில் ஜாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்ட ஓய்வு பெற்ற ஆசிரியருமான அண்ணாதாசன் கழக வளர்ச்சிக்கு ரூ.5000 நன்கொடை வழங்கியுள்ளார்.

கழக ஆதரவாளர் மயிலாடுதுறை பி. இராசேந்திரன் கழக வளர்ச்சிக்கு ரூ.5000 நன்கொடை வழங்கியுள்ளார்.

(நன்றியுடன் பெற்றுக் கொண்டோம்)

# சாதியை எதிர்க்க இணைந்து நிற்போம்: அம்ருதா–கவுசல்யா உருக்கமான சந்திப்பு



தெலுங்கானாவில் தொழில் அதிபரின் மகள் அம்ருதா, பிரனாய் என்ற தலித் இளைஞரை காதலித்து ஜாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்டார். அம்ருதாவுக்கு வயது21. பிரணாய்க்கு வயது 24. இவர்களின் குழந்தை அம்ருதாவின் வயிற்றில் வளருகிறது. அம்ருதாவின் தந்தையான தொழில் அதிபர், கூலிப்படையை வைத்து பிரணாயை வெட்டிக் கொலை செய்து விட்டார். இதற்காகக் கூலிப் படைக்கு அவர் கொடுத்த பணம் ஒன்றரை கோடி ரூபாய். இணையர் இருவருமே படித்தவர்கள். பள்ளிப் பருவத்திலிருந்தே காதலித்தவர்கள்.

இளம் காதல் கணவனை இழந்து தவிக்கும் அம்ருதா, “எனது வயிற்றில் வளரும் குழந்தையை ஜாதி எதிர்ப்புப் போராளியாக வளர்ப்பேன். இனி நானும் ஒரு ஜாதி எதிர்ப்புப் போராளி” என்று ஒரு பேட்டியில் கூறியுள்ளார். இதேபோல் ஜாதி வெறிக்கு தனது கணவரை பலி கொடுத்த உடுமலை கவுசல்யா, ஓடோடிச் சென்று அம்ருதாவை நேரில் சந்தித்து ஆறுதல் கூறியுள்ளார். அத்துடன் அம்ருதாவுக்கு தனது உணர்வுகளை வெளிப்படுத்தும் கடிதம் ஒன்றையும் எழுதி நேரில் அளித்திருக்கிறார்.

அம்ருதாவுக்கு கவுசல்யா எழுதிய கடிதம் இது:

“இதயத்தில் இருந்த காதலுக்கு நீங்கள் உண்மையாக இருக்க வேண்டும் என்று நினைத்திருந்தால், அதற்கு சமூகம் ஒரு தடையாகவே இருக்கும். அதற்கு ஒரே காரணம்தான், சாதி கட்டமைப்பு உருவாக்கிய வெறுப்பு. நாம் நம் மனதிற்கு பிடித்த ஒரு நபருடன் வாழவேண்டும் என்பதே ஆசை. ஆனால், அந்த உணர்ச்சியை நம் பெற்றோர்களால் ஒருபோதும் புரிந்து கொள்ள முடியாது அம்ருதா. நம் பெற்றோர் நம் மீது அதிக அன்பு வைத்திருக்கலாம். ஆனால், சாதியின் பெருமை மீது அவர்கள் வைத்திருக்கும் அன்பு அதைவிட அதிகம்.

உங்கள் கணவர் பிரனாயை நீங்கள் புரிந்து கொண்டது போல, குடும்பத்தினரால் ஏன் புரிந்து கொள்ள முடியவில்லை என்று யோசித்திருப்பீர்கள். சாதி அவர்கள் கண்களை மறைத்ததில் பெற்ற மகளான உங்களையே அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர்கள் எப்படி பிரனாயை புரிந்து கொள்ள முடியும். இதில் வியப்பேதும் இல்லை.

பெற்றோர்களால் உங்களுக்கு இப்படி ஒரு காரியத்தை செய்ய முடியும் என்று நீங்கள் நினைத்துக்கூட பார்த்திருக்கமாட்டீர்கள். அவர்களின் சாதி மேலாதிக்கத்துக்கு முன்னதாக ’காதல்’ என்பது ஒன்றுமில்லை. பிரனாய் உங்களை ஒரு தாய்ப்போல் பார்த்துக் கொண்டிருப்பார். அந்த காதல்தான் நீங்கள் போராட உங்களுக்கு சக்தி கொடுக்கப் போகிறது என்று எனக்கு தெரியும்.

பிரனாயின் குழந்தை உங்கள் வயிற்றில் வளர்வதை எதிர்ந்து நிற்பவர்களை நீங்கள் எதிர்த்து நிற்கப் போகிறீர்கள். உங்களுக்கு பிறக்கப் போகும் குழந்தைதான், அவர்களின் சாதிக்கு எதிராக நீங்கள் பயன்படுத்தப்போகும் சவுக்கடி. நீதிக்கான இந்தப் போராட்டத்தின்போது, உங்களை போன்ற எண்ணம் கொண்ட நபர்களை நீங்கள் சந்திப்பீர்கள். சமூக சிந்தனையும் உறுதியும் கொண்ட மக்களை நீங்கள் சந்திக்கும்போது, நீங்கள் நினைத்துப் பாரத்ததைவிட, அர்த்தமுள்ள உறவுகள் உங்களுக்கு கிடைக்கும்.

உங்கள் வலியை தங்கள் வலியாக எடுத்துக்கொள்ளும் மக்கள் இங்கிருக்கிறார்கள். நீங்கள் தனிமையாக உணர வேண்டிய அவசியம் இனி இருக்காது. பிரனாய் உங்களுக்கு ஒரு குழந்தையை விட்டுச்சென்றுள்ளார். ஒரு புதிய சமூக இறக்கத்தை அவர் கொடுத்து சென்றிருக்கிறார். பிரனாய் அருகில் இல்லாமல் நீங்கள் நின்று கொண்டிருக்கிறீர்கள். சில காலங்களுக்கு முன், நானும் உங்கள் இடத்தில்தான் இருந்தேன். என் வாழ்க்கை முழுவதும் இருண்டு போனது எனக்கு இன்னும் நினைவிருக்கிறது.

முன்னொரு காலத்தில் நான் பயந்து போயிருந்தேன். என் சங்கர் இல்லாமல் என்னால் ஒருநாள் கூட இருக்க முடிந்ததில்லை. இரண்டரை ஆண்டுகளாக அவர் இல்லாமல் தனியாக வாழ்ந்து வருகிறேன். பிரனாயை கொன்றவர்களுக்கு தண்டனை வாங்கிக் கொடுத்து நீதியை நீங்கள் வென்றெடுப்பது மிகவும் முக்கியம்.

நாம் இன்னும் நிறைய போராட வேண்டி இருக்கிறது அம்ருதா. ஆணவக் கொலைகளை தடுக்க தனிச்சட்டம் பெற நாம் வலியுறுத்த வேண்டும். நாம் வாழும் வரை சமூக நீதியின் வீரர்களாக மாறி, சாதி கட்டமைப்பை ஒழிக்க வேண்டும். இதுவே பிரனாய்க்கு நீங்கள் வாங்கித்தரும் நீதி. சாதியை ஒழிக்க தமிழகத்தில் பலரும் போராடிக் கொண்டிருக்கிறோம். எங்கள் ஒவ்வொருக்கும் நீங்கள் குழந்தைதான். இக்கடிதம் மூலம் நான் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சாதி எதிர்ப்புக்கு போராடும் சக்தியாக நாங்கள் உங்களுடன் இருக்கிறோம். ஆணவக் கொலைகளுக்கு எதிராக சட்டம் கொண்டு வருவது முதல் அனைத்திலும் தனிப்பட்ட முறையில் உங்களுக்கு நான் என்றென்றும் துணை நிற்பேன் என்று கூறி விடைபெறுகிறேன்” - கவுசல்யா.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 5th October 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN